பெயர் ராஜோக்கியம் எ.சா.1

சிஆர்எம்பி 4215/2023 நாள்–07.08.2025

<u>சாட்சி ஆஜர்படுத்தப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன் பேரில் மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) இலக்கியா எனது முதல் தாரத்தின் இரண்டாவது மகள் ஆவார். அவரை உடையார்பாளையம் தாலுக்கா தத்தனூர் கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.இலக்கியாவிற்கு திருமணம் உடையார்பாளையத்தில் நடைபெற்றது.

2) பெண் வீட்டார் சார்பாக திருமண வரவேற்பு அரியலூரில் உள்ள கீதா மகாலில் நடைபெற்றது என்றால் சரிதான்.

3) இந்த மனுவில் அசல் வழக்கு எம்.சி. 1/2009ல் தீர்ப்பு நகலை படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். அதில் மனுதாரருக்கு உணவு, உறைவிடம், கல்வி, மருத்துவ செலவிற்காக அப்போதுள்ள விலைவாசியின் அடிப்படையில் அவர்திருமணமாகும் வரை மாதா மாதம் ரூ.1000 கொடுக்கச் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த உத்தரவு 18.04.2011ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு 14 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான்.இந்த 14 வருடத்தில் அனைத்து பொருட்களின் விலைவாசி பல மடங்கு உயர்ந்துள்ளது என்றால் சரிதான்.

5) மனுதாரர் அரியலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 270/2011ல் ஜீவனாம்சம் கூடுதலாக கேட்டு மனுத்தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.அந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் என்னை முதல் சாட்சியாக விசாரித்துள்ளார்கள் என்றால் சரிதான்.

6) என்னை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது, என் முதல் மகளுக்கு திருமணம் நடைபெற்றது, திருமணத்தில் சீர்வரிசை நான்தான் செய்துக் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளேனா அது போன்று சாட்சியம் சொன்னேனா என்று எனக்கு நினைவில்லை. அந்த தவறை சரிசெய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் அந்த தவறே இப்போதுதான் எனக்கு தெரியவந்தது.

7) என் முதல் தாரத்தின் மகள்கள் இருவரும் அரியலூரில் உள்ள அரசினர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் படித்தார்கள். அந்த பள்ளியில் எனக்கு பாதி பள்ளி கட்டண சலுகை உண்டு அதனால் அங்கு படித்தார்கள்.

8) என் மகள்கள் 12ம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்றதால், மேல்படிப்பில் சென்னை தனியார் கல்லூரியில் படித்தார்கள். அவர்களுக்குண்டான படிப்பு செலவை நான்தான் பார்த்துக்கொண்டேன்

என்றால் சரிதான். படிப்பு செலவு சலுகையில் படித்தார்கள். இதர செலவுகளை நான் செய்தேன்.

9) அவர்கள் எந்த கல்லூரியில் படித்தார்கள் என்று பெயர் நினைவில்லை. நான் சொல்வதுபோல் எந்த தனியார் கல்வி நிறுவனத்திலும் இலவசமாக படிப்பு செலவு செய்யமாட்டார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) அரியலூரில் நடந்த வழக்கில் 16 அயிட்ட சொத்துக்கள் பொறுத்து வழக்கு தாக்கல்செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

11) அந்த வழக்கில் கண்டுள்ள 4 முதல் 16 அயிட்ட சொத்துக்கள் எனது பூர்வீக சொத்துக்கள் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல

12) அந்த சொத்துக்களில் நான்தான் பயிர் செய்கிறேன் அதிலிருந்து வருடத்திற்கு ஒன்றிலிருந்து ஒன்றேகால் லட்சம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல.

13) அரியலூர் பெரியார் நகரில் மூன்று வீடுகள் உள்ளது என்றும், அந்த மூன்று வீடுகளையும் நான்தான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

14) 1ம் மனுதாரர் எனது மகள் என்பதால் அவருக்குண்டான அனைத்து அடிப்படை தேவைகளையும் செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

15) எனக்கு 20 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளது என்றும்,அதில் வேண்டிய பயிர்கள் செய்து வருடத்திற்கு 15 முதல் 20 லட்சம் வரை வருமானம் வரும் என்றால் எனக்கு அந்த சொத்தே இல்லை.

16) நான் பணி ஓய்வு ஊதியத் தொகை பெறுகிறேனா என்றால் பெறுகிறேன். அந்த ஓய்வு ஊதியத்தை மாதா மாதம் என் வங்கி கணக்கில்தான் வரவு வைக்கப்படுகிறது என்றால் சரிதான். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, அரியலூர் கிளையில் எனக்கு வரவு வைக்கப்படுகிறத.

17) 2015ம் வருடம் நான் பணி ஓய்வு பெற்றேன். அப்போது நான் வாங்கிய சம்பளம் 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரத்திற்குள் இருக்கும். எனது வங்கியின் பாஸ்புக் படிவத்தை பார்த்தால் நான் எவ்வளவு சம்பளம் வாங்குகிறேன் என்று அதில் இருக்கும் என்றால் சரிதான்.

18) நான் மாதம் ஐம்பதாயிரத்திற்கு மேல் ஓய்வு ஊதியம் வாங்குகிறேன் என்றால் இல்லை. நான் வங்கியின் ஸ்டேட்மெண்ட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால்தாக்கல் செய்துள்ளேன்.

19) நான் வங்கியின் பாஸ்புக்கை தாக்கல்செய்தால் எனக்கு எவ்வளவு வருமானம் வரும் என்று தெரிந்துவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல

20) நான் கையில் பணம்அதிகம் வைத்து வட்டிக்கு கொடுத்து மாதம் 50,

60 ஆயிரம் வருமானம் பெறுகிறேன் என்றால் சரியல்ல.

21) தற்போதைய விலைவாசியின்படி மனுதாரரின் உணவு, உடை, உறைவிடம், மருத்துவ செலவு, படிப்பு செலவிற்காக மாத மாதம் ரூ.25,000 கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

22) அரியலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 270/2011 வழக்கில் எனக்கு நிலங்கள், வீடுகள் உள்ளதையும் அதன் மூலம் வருமானம் வருவதையும் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் இந்த மனுவில் அதனை ஒப்புக்கொண்டால் மனுதாரர் கோரியபடி பணம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதால், உண்மைகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுப்படி மனுதாரருக்கு பரிகாரம் நான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/–S.தனலெட்சுமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.